


# சமூகப் பணி செய்வோம்

மனிதன் ஒரு சமூக உயிரினம். அவனால் எல்லாத் தேவைகளையும் தனித்து நின்று நிறைவு செய்துகொள்ள முடியாது. அவன் எப்போதும் மற்றவர்களைச் சார்ந்து நிற்க வேண்டி யவனாகவே உள்ளான். மற்றவர்களின் உதவி, ஒத்தாசைகளை எதிர்பார்த்துள்ளான்.

இவ்வகையில் சமூகமாகச் சேர்ந்து வாழும் மனிதன் சில தனிப்பட்ட இபாதத்களை மட்டும் நிறை வேற்றுவதோடு நின்றுவிடுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அவன் ஈருலகிலும் வெற்றிபெற வேண்டுமென்றால் பிறர் நலனில், தான் சார்ந்துள்ள சமூக நலனில் அதிகம் அக்கறையோடும் பொறுப்புணர்வோடும் நடந்துகொள்ள வேண்டும் என அது எதிர்பார்க்கின்றது. இவ்வகையில் தான் சமூகப் பணி இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத்தப்படுகின்றது.

மக்களின் நலனுக்காகப் பிரதிபயுகாரங்களை எதிர்பார்க்காது தனியாகவோ, நிறுவன ரீதியாகவோ மேற்கொள்ளப்படுகின்ற சமூக நலத்திட்டங்களே சமூகப் பணிகள் எனப்படுகின்றன. இவை பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்படமுடியும். பலர் இப்பொதுப் பணிகளை இருவகையாகப் பிரித்து நோக்குவர்.

### சமூக சேவைகள்

*உதாரணம்:*

*1)* பசித்தவர்களுக்கு உணவளித்தல்.

*2)* நீர் வசதி செய்துகொடுத்தல்.

*4)* நோய்வாய்ப்பட்டோருக்கு உதவுதல்.

*5)* ஏழைகள், விதவைகள், அநாதைகளுக்கு நேசக்கரம் நீட்டுதல்.

*6)* அநியாயம் இழைக்கப்பட்டோருக்கு உதவுதல்.

### சமுதாயப் பணிகள்

*உதாரணம்:*


*1)* பள்ளிவாசல் கட்டுதல்.


*2)* பாடசாலைகள் அமைத்தல்.

*3)* நூலகங்கள் நிறுவுதல்.

*4)* சனசமூக நிலையங்களை உருவாக்குதல்.

*5)* மருத்துவ மனைகள் கட்டுதல்.






## அல் குர்ஆனும் பொதுப்பணியும்

பொதுப்பணி மற்றும் சமூகநலத் திட்டங்களில் ஈடுபடுவதை வலியுறுத்தி அல் குர்ஆனில் பல வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

***''நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்''. (5:2)***

***''பிறருக்கு உதவியும் நன்மையும் செய்யுங்கள். நிச்சயமாக (பிறருக்கு) நன்மை செய்கிறவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்'' (2:195)***

***''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ருகூஉ செய்யுங்கள். ஸஜூத் செய்யுங்கள் உங்களது இரட்சகனுக்கு இபாதத் செய்யுங்கள். நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள். நீங்கள் வெற்றிபெறுவீர்கள்''. (22:77)***

சமூக நலன் கருதிச் செய்யப்படுகின்ற நற்கருமங்கள் அனைத்தும் நல்லெண்ணத்துடனும் இறை திருப்தியை எதிர்பார்த்தும் ஒழுக்க விழுமியங்களைப் பேணியும் நிறைவேற்றப்படும் போது, இஸ்லாத்தில் இபாதத் ஆகக் கருதப்படுகின்றன. அல் குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடும் **பிர்** என்ற நன்மை பயக்கும் செயல்கள் என்ற விரிவான வட்டத்தில் அவை எல்லாம் அடங்குகின்றன. அத்துடன் சமூகநலன் பயக்கும் செயல்கள் அனைத்தும் இஸ்லாம் வலியுறுத்தும் **இமாரத்** எனும் பூமியை வளப்படுத்தும் உன்னத பணியோடும் தொடர்புடையன.



## ஸுன்னாவும் பொதுப் பணியும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுவயதில் இருந்தே பொதுப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டியுள்ளார்கள். நுபுவ்வத்துக்கு முன்னர் இடம்பெற்ற **ஹில்புல் புழூல்** எனும் சமூகநல அமைப்பை உருவாக்குவதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முக்கிய பங்கெடுத்தார்கள். மக்காவிலே யாருக்கும் அநியாயம் இழைக்கப்படக் கூடாது என்பதற்காக இவ்வொப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதேபோல் கஃபா புனருத்தாரனம் செய்யப்பட்டபோது ஏற்படவிருந்த பெரியதொரு குழப்பத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தலையிட்டு நிதானமாகத் தீர்த்துவைத்தார்கள். மக்கள் நம்பிக்கையோடு ஒப்படைத்த அமானிதப் பொருட்களைப் பெற்றுப் பாதுகாத்து உரிய நேரத்தில் அவர்களிடம் வழங்கி வைத்தார்கள். மஸ்ஜிதுன் நபவி நிருமானப் பணியில் கடுமையாக

உழைத்தார்கள். இப்பொதுப் பணிகள் எல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தூதைப் எடுத்துச் சொல்வதற்குப் பெரும் துணையாக அமைந்தன என்பதில் ஐயமில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல தருணங்களில் சமூகப் பணி தொடர்பாக வலியுறுத்தியுள்ளார்கள்.

''உங்களில் எவருக்குத் தனது சகோதரனுக்குப் பயனளிக்க முடியுமாக உள்ளதோ அவர் அதனைச் செய்யட்டும்''. (முஸ்லிம்)

''அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்துக்குரிய மனிதன் பிறருக்குப் பயனுள்ளவன் ஆவான்'' (ஜாமிஉஃ அஸ் ஸகீர்)

இஸ்லாம் பிறருக்கு நன்மை பயக்கின்ற சிறுசிறு செயல்களைக் கூட ஸதகா - தருமமாகக் கருதுகின்றது. பாதையில் இடையூறு விளைவிக்கும் ஒன்றை அகற்றுவது கூட ஸதக்கா என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். (முஸ்லிம்)

## ஸஹாபாக்கள் வாழ்வில் பொதுப் பணி

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி ஸஹாபாக்களும் அதிகம் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். மதீனாவில் ரூமா என்ற யூதன் தனது கிணற்றிலிருந்து நீரை பெரும் விலைக்கு விற்றுக்கொண்டிருந்தான். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''யார் ரூமாவின் கிணற்றை வாங்குகிறாரோ அவருக்கு சுவனம் உண்டு'' என்றார்கள். உடனே உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அக்கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்கு வக்பு செய்தார்கள், பொதுச் சொத்தாக மாற்றினார்கள். இதுவே வரலாற்றில் **பிஃரு ரூமா** என வழங்கப்படுகின்றது. இதுபோன்று நிறைய சம்பவங்களை நாம் ஸஹாபிகள் வாழ்வில் காணமுடியும்.

ஸஹாபாக்களைத் தொடர்ந்து வந்தவர்களும் கிணறு வெட்டுதல், பாதை அமைத்தல், செப்பனிடல், தங்குமிடங்கள் அமைத்தல், கால்வாய்கள் அமைத்தல், தரிசு நிலங்களை வளப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு சமூகநலப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். உண்மையில் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் பொதுப் பணிகளின் எல்லை மிக விரிவானது. சுருங்கக் கூறின் சமூகத்துக்குப் பயன் அளிக்கும் அனைத்து செயற்பாடுகளும் பொதுநலப் பணிகள் எனலாம். நாம் பொதுப்பணி செய்யும்போது இன, மத வேறுபாடுகளைக் கடந்து செயற்பட வேண்டும். இதனையே இஸ்லாம் வரவேற்கின்றது. ஒருநாட்டைக் கட்டியெழுப்புவதில் இது மிகவும் முக்கியமனாது.

**எனவே நாமும் எம்மால் முடியுமான வகையில் பொதுப் பணிகளில் பங்கெடுப்போம். எந்த சுய இலாபங்களையும் எதிர்பார்க்காது இதய சுத்தியோடு பணிசெய்வோம். இதன் மூலம் அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக்கொள்வதோடு எமது நாட்டைக் கட்டியெழுப்புவோம்.**

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

بِرٌّ        عِمَارَةٌ        حِلْفُ الْفُضُوْلِ

**பயிற்சி**

*1.* சமூக சேவை என்பதன் மூலம் நீங்கள் விளங்கிக்கொள்வது யாது?

*2.* சமூக சேவைகளுக்கு உதாரணம் ஐந்து குறிப்பிடுக.

*3.* பொதுப் பணி தொடர்பான ஒரு அல் குர்ஆன் வசனத்தையும் ஒரு ஹதீஸையும் எழுதிக் காட்டுக.

*4.* பொதுப் பணி செய்த ஸஹாபாக்களின் வாழ்விலிருந்து ஒரு நிகழ்வைக் குறிப்பிடுக.

*5.* பொதுப் பணிகள் செய்வதால் ஒருவருக்குக் கிடைக்கும் ஈருலகப் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.